செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 329 நாள்: 6/6/17

## கால்நடை பராமரிப்புத் துறை

"இலாபகரமான பால் உற்பத்திக்கு அரசு மானியத்துடன் கூடிய தீவனப் பயிர் அபிவிருத்தி திட்டம்"

பால் உற்பத்தியை பெருக்க உதவும் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தினை கால்நடை பராமரிப்புத் துறை மான்யத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தீவன செலவை குறைத்து பால் உற்பத்தியை பெருக்கி அதிக இலாபம் அளிக்கும் பசுந்தீவன உற்பத்தியினை மான்யத்துடன் பெற விருப்பமுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவி வரும் பசுந்தீவன பற்றாக்குறையை சமாளிக்க ஏதுவாக கால்நடை வளர்ப்பவர்களே பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில தீவன அபிவிருத்தி திட்டம் கடந்த 5 ஆண்டுகளாக தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இது கால்நடைகளுக்கான தீவனம் கிடைப்பதுடன் விவசாயிகளுக்கும் வருமானத்தை பெருக்கி கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த நிதி ஆண்டில் அரசு மான்யத்துடன் தீவன பயிர் சாகுபடிக்காக வேலூர் மாவட்டத்தில் 500 ஏக்கரில் இறவையில் குறைந்தபட்சம் 0.25 ஏக்கர் அதிகபட்சம் 1 ஏக்கர் 3 ஆண்டுகள் குறைவு இல்லாமல் அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் தீவன புல் மற்றும் 200 ஏக்கரில் சோளம் கோ.எப்.எஸ்-29 தீவன பயிர் சாகுபடி, 3000 ஏக்கர் பரப்பில் மானாவாரியில் குறைந்தபட்சம் 0.25 ஏக்கர் அதிகபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவன தட்டைப் பயிர் சாகுபடி, முன்னோடி விவசாயிகளுக்கு சோளம் மற்றும் தட்டைப் பயிர் விதைகளை 45 ஏக்கரில் பயிடும் பொருட்டு இடுபொருட்களாக வழங்கி அதன் மூலம் தீவன விதை உற்பத்தி செய்தல், நிலையான பசுந்தீவன உற்பத்திக்கு மண்ணின்றி குறைந்த நீர் செலவில் பயிர் செய்யக் கூடிய ஹைட்ரோபோனிக் தொழில்நுட்பம் மூலம் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய 15 ஹைட்ரோபோனிக் அலகுகள் 75% மான்யத்துடன் வழங்குதல், அசோலா உற்பத்திக்கு 600 விவசாயிகளுக்கு மான்யத்துடன் இடுபொருட்கள் வழங்குதல் உட்பட பல திட்டங்களை செயல்படுத்த உள்ளது.

இந்த திட்டத்தில் பலனடைய விரும்பும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள வேலூர் மாவட்டத்ததைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறையின் கால்நடை உதவி மருத்துவரை நேரில் சென்று அணுகி தங்களுக்கான திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பிக்கலாம்.

துணை இயக்குநர்,
கால்நடை பெருக்கம் மற்றும்
தீவன அபிவிருத்தி, வேலூர்.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
வேலூர்.

மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்
வேலூர்.

6/6/2017
வேலூர்- 9.